दक्षिण रेलवे/SOUTHERN RAILWAY

चेन्नै मंडल/CHENNAI DIVISION

No.PUB/MAS/2021/12/21 Date: 24.12.2021

# प्रेस विज्ञप्ति /PRESS RELEASE

## CHENNAI DIVISION MAKES WARFOOT EFFORTS TO RESTORE TRAFFIC ON BRIDGE 299

On 23rd December 2021, in view of structural damage, rail traffic was suspended on Bridge No.299 in Mukundarayapuram and Tiruvalam station in Arakkonam - Katpadi section of Chennai Division. While some trains passing through Arakkonam-Katpadi section were fully cancelled, few other trains were either short terminated, diverted or regulated and handled in Single line.

Bridge No. 299 is a British era Bridge built in the year 1865 across Ponnai River. The recent cyclones in Bay of Bengal that hit Tamil Nadu in November 2021 and the resultant floods caused havoc to the Bridge structure. On 23rd December 2021, a crack was noticed in one of the pillars of the bridge and hence the rail traffic was suspended on the Downline in Arakkonam - Katpadi section.

Chennai Division accords paramount importance to the safety of train operations and passenger safety. The Division is taking concerted efforts to restore Bridge No.299 and resume normal traffic in Arakkonam - Katpadi section. One Technical Expert team from Structural Engineering Research Center (SERC-CSIR) along with Shri Ganesh, Divisional Railway Manager/Chennai and Engineering Officials inspected the Bridge today (24th December 2021). All out efforts are being taken to restore the bridge at the earliest duly rectifying the structural damage and accommodate trains on both UP & DOWN lines with speed restrictions.

Passengers are requested to regularly follow the media updates of Chennai Division and plan travel accordingly.

**Sd/-**

ए .एलुमलै/ (A.Elumalai)

जनसंपर्क अधिकारी / Public Relations Officer

चेन्नै मंडल/Chennai Division

Follow us

https://sr.indianrailways.gov.in/index.jsp

https://twitter.com/DrmChennai

दक्षिण रेलवे / தெற்கு இரயில்வே
चेन्नै मंडल / சென்னை கோட்டம்

எண்.PUB/MAS/2021/12/21 தேதி: 24.12.2021

**प्रेस विज्ञप्ति /செய்தி வெளியீடு**

**பாலம் எண்.299-ஐ மீட்டெடுத்து ரயில் போக்குவரத்தை மறுபடியும் தொடங்க தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் போர்க்கால அடிப்படையில் முயற்சி எடுத்து வருகிறது.**

டிசம்பர் 23 2021-ஆம் தேதி பாலம் எண்.299 இல் ஏற்பட்ட / கட்டமைப்பு சேதத்தை கருத்தில் கொண்டு, சென்னை கோட்டத்தின் அரக்கோணம்-காட்பாடி பிரிவில் முகுந்தராயபுரம் மற்றும் திருவலம் நிலையத்தில் ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அரக்கோணம்-காட்பாடி பிரிவு வழியாக செல்லும் சில ரயில்கள் முழுமையாக ரத்து செய்யப்பட்ட நிலையில், வேறு சில ரயில்கள் குறுகிய காலம் நிறுத்தப்பட்டு / திருப்பி விடப்பட்டு அல்லது ஒழுங்குபடுத்தப்பட்டு ஒற்றை வழித்தடத்தில் கையாளப்பட்டன.

பாலம் எண்.299, 1865-ஆம் ஆண்டு பொன்னை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட ஒரு பிரிட்டிஷ் காலத்திய பாலம் ஆகும். சமீபத்தில் 2021-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட சூறாவளிகள் தமிழ்நாட்டைத் தாக்கியதன் விளைவாக ஏற்பட்ட வெள்ளம் இந்தப் பாலத்தின் கட்டமைப்பிற்கு பேரழிவை ஏற்படுத்தியது. டிசம்பர் 23 2021-ஆம் தேதி, இப்பாலத்தின் தூண்களில் ஒன்றில் விரிசல் காணப்பட்டது, எனவே அரக்கோணம்-காட்பாடி பிரிவில் உள்ள டவுன்லைனில் ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

பாதுகாப்பான ரயில் போக்குவரத்து மற்றும் பயணிகளின் பாதுகாப்பிற்கு சென்னை கோட்டம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. சென்னை ரயில்வே கோட்டம், அரக்கோணம் - காட்பாடி பிரிவில் பாலம் எண்.299-ஐ மீட்டெடுக்கவும், வழக்கமான போக்குவரத்தை மீண்டும் தொடங்கவும் ஒருங்கிணைந்த முயற்சிகளை எடுத்து வருகிறது.

இன்று (டிசம்பர் 24, 2021) சென்னை கோட்ட ரயில்வே மேலாளர் திரு கணேஷ், பொறியியல் அதிகாரிகள் மற்றும் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தைச் (SERC-CSIR) சேர்ந்த ஒரு தொழில்நுட்ப வல்லுநர் குழு, பாலத்தை ஆய்வு செய்தனர். இந்தப் பாலத்தை விரைவில் மீட்டெடுக்கவும், கட்டமைப்பு சேதத்தை சரிசெய்யவும், வேகக் கட்டுப்பாடுகளுடன் மேல், கீழ் இருவழி வழித்தடங்களிலும் ரயில்

போக்குவரத்தை மேற்கொள்ளவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை ரயில்வே கோட்டத்தின் ஊடக அறிவிப்புகளை தொடர்ந்து பின்பற்றி அதற்கேற்ப பயணத்தை திட்டமிடுமாறு பயணிகளை கேட்டுக்கொள்கிறோம்.

-SD-
(A. ஏழுமலை)
மக்கள் தொடர்பு அதிகாரி
**சென்னை கோட்டம்**

Follow us
https://sr.indianrailways.gov.in/index.jsp
https://twitter.com/DrmChennai